# சந்திப்பிழை அறிதல்

## ❖ சந்திப் பிழையை நீக்குதல்

வல்லின எழுத்துக்கள் ஆறு – க், ச், ட், த், ப் இவைகளில் க், ச், த், ப் ஆகிய எழுத்துகள் மிகவும் வலிமையானவை. ட், ற – ஆகிய இரண்டு எழுத்துகளும் மொழிக்கு முதலில் வர இயலாதவை வல்லினம் என்று அழைக்கப்படும்.

க, ச, த, ப மிகவும் சிறப்பு வாய்ந்தவை. சக்தி வாய்ந்த அந்த எழுத்துக்கள் வருமொழியில் முதல் எழுத்தாக வரும்போது கூடுதலாக அதே மெய் எழுத்து மிகும்.

க யானை கால் - யானைக்கால்
ச யானை சங்கிலி - யானைச்சங்கிலி
த யானை தந்தம் - யானைத்தந்தம்
ப யானை பாகன் - யானைப்பாகன்

இவ்வாறு எழுதாமல் வல்லினம் மிகாமல் எழுதுவது சந்திப்பிழை ஆகும். சில சமயங்களில் வல்லினம் மிகாமலும் அமையும், வலிந்து நாம் வல்லினம் எழுத்துகளைச் சேர்க்க வேண்டடியதில்லை. வல்லின மெய்களை சேர்ப்பதும், தேவையற்ற இடத்தில் நீக்குவதும் வேண்டும். இதுவே சந்திப்பிழைகளை நீக்கி எழுதுவதாகும்.

### வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

### வல்லினம் மிகும் இடங்கள்

1. இரண்டாம் வேற்றுமை உருபிற்குப் பின் வல்லினம் மிகும் (ஐ)
   குழந்தையை + கண்டேன்= குழந்தையைக் கண்டேன்
   பொருளை + தேடு = பொருளைத்தேடு
   புலியை + கொன்றான் = புலியைக் கொன்றான்
   நூலை + படி = நூலைப்படி

2. நான்காம் வேற்றுமை உருபிற்குப் பின் வல்லினம் மிகும்.
   வீட்டிற்கு + சென்றான் = வீட்டிற்குச் சென்றான்
   கல்லூரிக்கு + போனாள் = கல்லூரிக்குப் போனாள்

3. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகும். ‘அது’ – மறைந்திருப்பது
   தாமரை + பூ = தாமரைப்பூ
   குதிரை + கால் = குதிரைக்கால்

4. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகும்.
   குடி + பிறந்தார் = குடிப்பிறந்தார்
   வழி + சென்றார் = வழிச்சென்றார்

5. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் வர மிகும் (வல்லெழுத்தை அடுத்து வந்த குற்றிலுகரம்)
   பாக்கு + தூள் = பாக்குத்தூள்
   தச்சு + தொழில் = தச்சுத்தொழில்
   கேட்டு + கொடு = கேட்டுக்கொடு
   பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
   படிப்பு + செலவு = படிப்புச்செலவு
   பற்று + தொகை = பற்றுத்தொகை

6. மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் சில இடங்களில் வல்லினம் மிகும்.
   இரும்பு + தூள் = இரும்புத்தூள்
   மருந்து + கடை = மருந்துக்கடை
   கன்று + குட்டி = கன்றுக்குட்டி

7. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும் ‘எ’ என்னும் வினா எழுத்திற்குப் பின்னும் வலி மிகும்.
   அ + கடல் = அக்கடல்
   இ + பாடம் = இப்பாடம்

உ + சிறுவன் = உச்சிறுவன்

எ + தொழில் = எத்தொழில்

8. சுட்டு, வினாக்களின் திரிபுகளான அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அந்த + கிணறு = அந்தக்கிணறு

இந்த + தமிழ் = இந்தத்தமிழ்

எந்த + செயல் = எந்தச்செயல்

9. அந்த, இந்த, அப்படி, இப்படி என்னும் சுட்டுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அந்த + பையன் = அந்தப்பையன்

இந்த + சிறுவன் = இந்தச்சிறுவன்

அப்படி + செய் = அப்படிச்செய்

இப்படி + பார் = இப்படிப்பார்

10. எந்த, எப்படி, எங்கு என்ற வினாச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

எங்கு + பார்த்தாய் = எங்குப்பார்த்தாய்?

எப்படி + சாதித்தாய்= எப்படிச்சாதித்தாய்?

எந்த + செடி = எந்தச்செடி?

11. நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து நிற்க, வருமொழி முதலில் வரும் வல்லினம் மிகுந்து ஒலிக்கும் (உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்)

நிலா + சோறு = நிலாச்சோறு

மழை + காலம் = மழைக்காலம்

பனி + துளி = பனித்துளி

12. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்

மல்லி + பூ = மல்லிப்பூ

13. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்

சதுரம் + பலகை = சதுரப்பலகை

வட்டம் + பாறை = வட்டப்பாறை

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு

14. அகர இகர ஈற்று வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

தேட + சொன்னான் = தேடச்சொன்னான்

வர + சொன்னான் = வரச்சொன்னான்

ஓடி + பிடித்தான் = ஓடிப்பிடித்தான்

15. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்

பூ + பறித்தான் = பூப்பறித்தான்

கை + கரண்டி = கைக்கரண்டி

தீ + பற்றியது = தீப்பற்றியது

16. ஆய், போய் என்னும் வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

நன்றாய் + பேசினார்= நன்றாய்ப்பேசினார்

போய் + தேடு = போய்த்தேடு

17. இனி, தனி மற்று, மற்ற, மற்றை என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்

இனி + காணலாம் = இனிக்காணலாம்

தனி + தமிழ் = தனித்தமிழ்

மற்று + கண்டவை = மற்றுக்கண்டவை

மற்ற + பொருள்கள் = மற்றப்பொருள்கள்

மற்றை + கூறுகள் = மற்றைக் கூறுகள்

18. என, ஆக என்னும் சொற்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக்கூறினான்

ஆக + சொன்னான் = ஆகச்சொன்னான்

19. சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்

சால + சிறந்தது = சாலச்சிறந்தது

தவ + பெரிது = தவப்பெரிது

20. ஈறுகெட்ட எதிரிமறைப் பெயரெச்சத்தின் பின்வரும் வல்லினம் மிகும்

உண்ணா + சோறு = உண்ணாச்சோறு

ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

அழியா + புகழ் = அழியாப்புகழ்

21. தனிக்குறிலையடுத்து வரும் ஆ என்னும் நெடிலுக்குப் பின்வரும் வல்லினம் மிகும்

பலா + சுளை = பலாச்சுளை

இரா + பகல் = இராப்பகல்

கனா + காலம் = கனாக்காலம்

22. முற்றியலுகரச் சொற்களின் பின் வல்லினம் மிகும்

திரு + குறள் = திருக்குறள்

பொது + சொத்து = பொதுச்சொத்து

23. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வல்லினம் மிகும்

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்

மலர் + கூடை = மலர்க்கூடை

24. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வல்லினம் மிகும்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

இரும்பு + சாவி = இரும்புச்சாவி

25. நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வல்லினம் மிகும்

சட்டை + துணி = சட்டைத்துணி

குடை + கம்பி = குடைக்கம்பி

26. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் வல்லினம் மிகும்

அடுப்பு + புகை = அடுப்புப்புகை

விழி + புனல் = விழிப்புனல்

27. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்

பவளம் + பற்று = பவளப்பற்று

மலர் + கண் = மலர்க்கண்

28. ட, ற, ஒற்று இரட்டிக்கும் உயிர்தொடர், நெடி தொடர் குற்றியலுகரத்திற்குப் பின் வல்லினம் மிகும்

வயிறு + போக்கு = வயிற்றுப்போக்கு (உயிர்த்தொடர்)

முரடு + காளை = முரட்டுக்காளை

நாடு + பற்று = நாட்டுப்பற்று (நெடில்தொடர்)

காடு + தேன் = காட்டுத்தேன்

## ➢ <u>வல்லினம் மிகா இடங்கள்</u>

1. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினமிகாது

தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்

நீர் + குடித்தான் = நீர் குடித்தான்

துணி + கட்டினான் = துணி கட்டினான்

2. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது

தாய் + தந்தை = தாய் தந்தை

இரவு + பகல் = இரவு பகல்

செடி + கொடி = செடி கொடி

3. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர்த்து மற்றப் பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது

நல்ல + குழந்தை = நல்ல குழந்தை

படித்த + பெண் = படித்த பெண்

செய்யாத + செயல் = செய்யாத செயல்

4. உயர்திணைப் பொதுப்பெயர்களின் பின் வல்லினமிகாது

தொழிலாளர் + தலைவர் = தொழிலாளர் தலைவர்

மாணாக்கர் + கூடினர் = மாணாக்கர் கூடினர்

தாய் + பாடினாள் = தாய் பாடினாள்

5. அஃறிணை வினைமுற்றின் பின் வல்லினம் மிகாது

முழங்கின + சங்குகள் = முழங்கின சங்குகள்

பாடின + குயில்கள் = பாடின குயில்கள்

வந்தது + கப்பல் = வந்தது கப்பல்

6. எட்டு, பத்து தவிர மற்ற எண்களின் பின் வல்லினம் மிகாது

ஒன்று + கொடு = ஒன்று கொடு

இரு + சீர் = இருசீர்

மூன்று + கிளி = மூன்று கிளி

7. அது, இது என்னும் சட்டகளின் பின்னும் எது? யாது? என்னும் வினாச் சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + போயிற்று = அது போயிற்று

இது + பறந்தது = இது பறந்தது

எது + கண்டது = எது கண்டது?

யாது + சொல் = யாது சொல்?

8. அத்தனை, இத்தனை, எத்தனை எனும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + பழங்களா? = அத்தனை பழங்களா?

இத்தனை + பூக்களா? = இத்தனை பூக்களா?

எத்தனை + தேங்காய் = எத்தனை தேங்காய்?

9. வினாவை உணர்த்தும் ஆ, ஓ, ஏ, யா என்னும் வினா எழுத்துகளின் பின் வல்லினம் மிகாது

அவளா + தைத்தாள் = அவளா தைத்தாள்?

இவளோ + போனாள் = இவளோ போனாள்?

அவனே + செல்வான் = அவனே செல்வான்?

10. சில, பல என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது

பல + குடிசைகள் = பல குடிசைகள்

சில + சொற்கள் = சில சொற்கள்

11. விளிப்பெயர் பின்னும், வியங்கோள் வினைமுற்றின் பின்னும் வல்லினம் மிகாது

கண்ணா + கேள் = கண்ணாகேள்

வேலா + செல் = வேலாசெல்

வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

12. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது

நாய் + போனது = நாய் போனது

வள்ளி + படித்தாள் = வள்ளி படித்தாள்

13. வினைத்தொகையில் வல்லினம் மிகாது

ஊறு + காய் = ஊறுகாய்

ஆடு + கொடி = ஆடு கொடி

விரி + கதிர் = விரி கதிர்

14. அடுக்குத் தொடரில் வல்லினம் மிகாது

தீ + தீ = தீதீ

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

15. சில ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது

வள்ளுவர் + கருத்து= வள்ளுவர் கருத்து

ஔவை + சொல் = ஔவை சொல்

16. அவை இவை என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது

அவை + போயின = அவை போயின

இவை + செய்தன = இவை செய்தன

17. படியென்னும் சொல் வினையோடு சேர்ந்து வருமிடத்தில் வல்லினம் மிகாது

வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்

போகும்படி + சொன்னான் = போகும்படி சொன்னான்

18. இரட்டைக் கிளவியில் வல்லினம் மிகாது

கல + கல = கலகல

பள + பள = பளபள

19. அவை, இவை என்னம் சுட்டுச் சொற்களின் பின் வல்லினம் மிகாது

அவை + சென்றன = அவை சென்றன

இவை + செய்தன = இவை செய்தன

20. அது, இது என்னும் சுட்டுகளின் பின்வரும் வல்லினம் மிகாது

அது + பறந்தது = அது பறந்தது

இது + கடித்தது = இது கடித்தது

21. எது, யாது என்னும் வினாச்சொற்களின் பின் வல்லினம் மிகாது

எது + பறந்தது = எது பறந்தது?

யாது + தந்தார் = யாது தந்தார்?

22. இரண்டு வடசொற்கள் சேரும்போது வல்லினம் மிகாது

சங்கீத + சபா = சங்கீத சபா

மகாஜன + சபா = மகாஜன சபா

23. சில வினையெச்சத் தொடரில் வல்லினம் மிகாது

வந்து + போனான் = வந்து போனான்

செய்து + கொடுத்தான் = செய்து கொடுத்தான்

24. வல்லின றகர, டகரத்தின் பின் ஒற்று வராது

| சரியானது | தவறானது |
|---|---|
| கற்க | கற்க்க |
| பயிற்சி | பயிற்ச்சி |
| விற்கப்படும் | விற்க்கப்படும் |
| கேட்கிறான் | கேட்க்கிறான் |
| சொற்கள் | சொற்க்கள் |
| வேட்பாளர் | வேட்ப்பாளர் |

எங்களது Facebook பக்கம்

English – Examsdaily தமிழ் – Examsdaily Tamil

எங்களது WhatsAPP Group - Click Here